# இந்து மரபுக் கல்வியின் ஆன்மீக சிந்தனைகள்

**திருமதி ஜெ. இராசநாயகம்**

ஆன்மீக ஞானத்தில் சிறந்து விளங்கிய பலர் ஆன்மீக வாழ்விலே இலயித்து அவை பற்றிய பல கருத்துக்களையும் அவ்வப்போது வெளியிட்டுள்ளார்கள். விஞ்ஞானம், கலை, பொருளாதாரம், அரசியல், பொறியியல் போன்ற அறிவு முன்னேற்றத்துடன் ஆன்ம முன்னேற்றத்தையும் இணைத்துக் கொண்டு போக முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். இன்று பிரத்தியட்ச உண்மையாக விளங்கும் விஞ்ஞானமானது எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் கலந்து விட்டதோ அதே போல் ஆன்மீக விழுமியங்களும் காலத்தால் அழிய முடியாதனவாய் அழிக்க முடியாதனவாய் செல்வாக்குப் பெறுகின்றன.

இயந்திரமான உலகிலே விஞ்ஞானம். தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலே ஏற்பட்ட மனித அடைவுகள் பொருள்சார் நிலைமைகளிலே முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய நிலையில் ஆன்மா சார்ந்த நிலைமாற்றமே உடனடித் தேவையாக உள்ளது. இந்த நிலை கல்வியின் மூலம் ஏற்படலாம். கல்வியின் மூலம்வளர்ந்து வருகின்ற விழுமியங்களிலே ஆன்மீக விழுமியங்கள் முக்கியமானவை கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்கின்றது. மனிதன் ஒருவன் தான் வாழும் சமூகத்திற்கும், பரந்த உலத்திற்கும் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைகின்றன. பௌதீக விஞ்ஞானக் கல்வியுடன் இணைந்த வகையில் ஆன்மாவைப் பயன்படுத்தி மேம்படுத்துவதன் வாயிலாகவே இது சாத்தியமாகும். ஆன்மீக சிந்தனைகள் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சியைத் தருகின்றன.

ஒருவன் தான் வாழும் சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் பயன்படும் வண்ணம் அவனது கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நிலைகளில் நின்று ஆன்மீக இன்பம் பெறும் வழி கல்வியின் மூலம் ஏற்படுகின்றது. ஆன்மீக உளப்பயிற்சியோடு உடற்பயிற்சியும் முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும். ஒருவன் பெறுகின்ற உண்மைக் கல்வியானது தன்னை உணரும் தன்மையை ஒருவனிடத்தில் ஏற்படுத்துகின்றது. I அத்தோடு மனிதன் கருணையும் மானிடப் பண்பும் உள்ளவனாகிறான். தன் நலம் நோக்காது சமூகத்திற்குப் பணி செய்யும் ஆர்வம் கல்வியின் மூலம் வளர்க்கப்படுவதனால் ஆன்மீக இன்பத்தைப் பெற்று மனிதன் சிறப்படைய இந்து மரபுக் கல்வி வழிகாட்டுகின்றது எனலாம்.

இந்துக் கல்வி மரபிலே ஆன்மீகம் இழையோடாத இடமே இல்லை எனக் கூறலாம். அக் கல்வி மரபிலே அத்தகைய ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகள் தொன்று தொட்டே வந்துள்ளன. **கல்வியின் மூலம் உண்மை, நன்மை, அழகு என்னும் தத்துவங்கள் வளர்க்கப்பட வேண்டும்.** அவைகள் சிறந்த கல்வித் தத்துவங்கள் ஆகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றிலே பாரதம் உலக வரலாற்றிலே மதிக்கத்தக்க பல சிந்தனையாளர்களை உலகிற்கு அளித்துள்ளது. சுவாமிஇராம கிருஷ்ணர் (1836 – 1886) , சுவாமி விவேகானந்தர் (1863 – 1902) இரவீந்திரநாத்தாகூர் 1863 – 1941) மகாத்மா காந்தியடிகள் (1869 – 1948) மகான் அரவிந்தர் (1872) பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாப போன்றோர்களது ஆன்மீகக் கல்வி சார்ந்த சிந்தனைகள் இந்தியக் கல்வி வரலாற்றிலே முக்கிய இடம் பிடித்துக் கொண்டன. இவர்கள் அரசியல் உணர்வும், ஆன்மீக உணர்வும், சமுதாய உணர்வும் கொண்ட தத்துவஞானிகளாவர்.

ஈழத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் [1822 – 1879] சுவாமி விபுலானந்தர் [1832 –1925] சேர் பொன் இராமநாதன் [1851 – 1930] சேர் பொன் அருணாசலம் [1853 – 1924] போன்றோர்களது கல்விச் சிந்தனைகளும் ஆன்மீக சிந்தனைகளுக்கு அழுத்தம் கொடுத்திருப்பதை அறிய முடிகின்றது.

மகான் இராமகிருஷ்ணரினதும் [1836 – 1886] சுவாமி விவேகானந்தரினதும் [1863 –1902] ஆன்மீகச் சிந்தனைகள் பாரத நாட்டின் கல்வி வரலாற்றைக் கட்டியெழுப்பும் ஆத்மீக பலங்

கொண்டவை ஆத்மீக ஞானம் என்பது ஒரு தனிமனிதனுக்கு மட்டும் உரியதன்று. முழுச் சமுதாயத்திற்குமே உரியதாகும். இருவரது சிந்தனைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.

மனிதனை அறியாமையில் இருந்து அறிவுக்கு இட்டுச் செல்வது கல்வியின் நோக்கமாகும். கல்வியானது மனிதனின் ஆன்மீக ஒளியைப் பெருக்கி மிளிரச் செய்தல் வேண்டும் என்பது சுவாமி இராமகிருஷ்ணரின் கருத்தாகும். உலகத்தில் வாழும் மனிதரிடையே எவ்வித பேதமும் இல்லை. சமயங்களும் ஒன்றாகவே மதிக்கப்படல் வேண்டும். அவற்றினிடையே ஒருமைப்பாடு காணப்பட வேண்டும் என்று ஆன்மீக அடிப்படையில் பணிகள் பல புரிந்தார். கல்வியின் மூலமே இவ்வகையான மனப்பக்குவம் வளரும் என்று சுவாமி இராமகிருஷ்ணர் கருதினார். இவ்வகையில் பாரத நாட்டின் தலை சிறந்த தேசியவாதியாகவும், அனைத்துலகவாதியாகவும், சிறந்த, கல்விமானாகவும் விளங்கினார். அவருடைய கல்வி நெறி பாரத நாட்டிற்கு மட்மன்றி அகில உலகிற்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றது. 2

ஒரு நாட்டின் சிறப்பு அந்த நாட்டின் ஆன்மீக வலிமையில்தான் உள்ளது. ஆன்மீக வலிமை கொண்டவர்களாகப் பாரதத்தில் பலர் காலத்திற்குக் காலம் தோன்றிய போதிலும் அந்த ஆன்மீக அறிவெல்லாம் மண்டியிட்டுக் கொண்டது ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உத்தம சீடனாகிய விவேகானந்தரின் முன் என்றே கூறலாம். சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஆன்மீகம் பற்றிய பல கருத்துகளை தெளிவாக எடுத்துரைத்தார். ஆன்மீக அடிப்படையில் விளக்கமளித்து இந்து மதத்தின் பெருமையை உலக நாடெங்கிலும் பரப்பியவராவர். அந்நிய நாகரீக மோகத்தில் இருந்த மக்களை ஆன்மீக நெறியின்பால் ஈர்த்தவராவர். இதன் அடிப்படையில் பல சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

இன்றைய கல்விச் சிந்தனையுடன் அவர் கருத்துக்கள் ஒன்றுபடுகின்றன. புத்தர், யேசுநாதர் போன்று அன்புவழி நின்று மக்களுக்குச் சேவை செய்தார். ஏழைகளின் கண்ணீரிலே கடவுளைக் கண்டார். வைதீகக் கொடுமை, பாரபட்சம் என்னும் துன்பங்களால் நசுக்கப்பட்டு உயிர் வாழும் ஏழை மக்களுக்காக ஒவ்வொரு இரவு பகல் பிரார்த்தனை செய்தார். "பிறருக்குச் சேவை செய்வதில் ஆனந்தம் கொள்ள வேண்டும்" என்றார். "உன்னுள்ளே இருக்கும் ஆன்மாவை நீ உணர்ந்தால் உலகையுணர அதிக காலம் தேவையில்லை" என்ற வாக்கியத்திற்கேற்பச் செயற்பட்டார். அவ்வகையில் அவருடைய சிந்தனைகளிலே ஆன்மீகம் கலந்திருப்பதை அறிய முடிகின்றது.

அத்தோடு "ஒவ்வொருவரும் பெறும் கல்வியானது உள்ளத்தின் ஆற்றலை அதிகப்படுத்தக் கூடியதாகவும், அறிவினை விரிவாக்கக் கூடியதாகவும் தத்தம் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை படைத்ததாகவும் அமைய வேண்டும்" என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அன்று சுவாமி அவர்கள் கூறிய இக் கருத்தினை இன்று கொத்தாரிக் கல்விக் குழுவும் குறிப்பிட்டுள்ளது. உள்ளம் ஒரு முனைப்பட்டு குவிந்து தன் முழு ஆற்றலுடன் செயலாற்றுதல் தான் அறிவு எழ வழியாகும். 3 இக்கருத்துகள் எல்லாம் கல்வியின் மூலம் வளருகின்ற ஆன்மீக விழுமியங்களை எடுத்துக் காட்டுவனவாய் அமைந்துள்ளன. கீழைத்தேயக் கல்வி மரபிலே இத்தகைய ஆன்மீகச் சிந்தனைகள் கல்விச் சிந்தனையாளர்களினுடைய எண்ணத்திலே தோன்றி இன்று வரை நிலை பெற்றதெனலாம்.

ஆன்மீக உணர்வினை முருகியல் உணர்வு முழுமையாக்குகின்றது. இந்த அடிப்படையில் கவியரசர் இரவீந்திரநாத்தாகூரின் (1863 – 1941) கல்விச் சிந்தனையில் முருகியற் கல்விக்கும் பெருமளவு பங்குண்டு. ஆன்மீக திருப்தியை மனிதரிடத்தில் உண்டாக்கும் முருகியற் கல்வி பற்றிய கருத்துக்கள் கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் அவர்கிளன் ஆன்மீகம் பற்றிய விழுமியக் கருத்துகளுடன் தொடர்புபடுவதை பெருகியிருந்த மக்களுக்குத் தாய் நாட்டின் உள்ளார்ந்த பெருமையையும் வலிமையையும் எடுத்து விளக்கினார். கவியரசரின் இலக்கியப் பணியும், கல்வித்தொண்டும் தத்துவப் போதனையும், நன்முறைத் தேசியமும் அவரை உலகப் பெரியாராக விளங்கச் செய்தது. இயற்கை, சமூகம், அன்பு சேவை ஆகியன ஒன்றிணைந்து கல்வியாக உதயமாக வேண்டும் எனக் கருதினார் 4. ஆன்மீக விடுதலையே உண்மையான விடுதலையென்று கண்ட தீர்க்கதரிசியாவார். இயற்கையழகில் மயங்கிய தாகூர் இயற்கைக்கு ஓர் ஆன்மீகத் தன்மையுண்டு என நம்பினார். இத்தகைய ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகளை உள்வாங்கிய நிலையில் இன்றைய கல்வி முறைகளும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகளைப் போன்று மகாத்மாகாந்தி [1869–1948] அவர்களின் கல்விச் சிந்தனைகளும் ஆன்மீகம் சார்ந்தனவாய் விளங்குவது குறிப்பிடத்தக்கது. தேசபக்தி, தேசவிடுதலை வழிவந்த இந்து தர்மம், சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பண்பு வாய்ந்ததாகக் காணப்படும் அதே வேளை ஆன்ம ஈடேற்றம் பற்றிய கல்வியையும், பயிற்சியையும் ஆழ்ந்து மொழிந்தார். சத்தியம், அகிம்சை என்பன அவரது வாழ்க்கைத் தத்துவத்தின் ஆதாரங்களாக மிளிர்ந்தன. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏதோ ஒருவிதமான இலக்கு உண்டு. இந்த இலக்கை அடைய ஒவ்வொருவரும் மேற் கொள்ளும்வழிகளும் தூய்மையானதாக இருத்தல் வேண்டும் என்ற உண்மையை காந்தி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்தார். காந்தி மகான் வாழ்ந்த காலம் நாடு ஆங்கிலேயரது ஆளுகைக்குள் அடங்கியிருந்த காலமாகும். கல்வி முறையானது பெருமளவு ஆங்கிலேயரின் கல்விக் கருத்துக்களின் அடிப்படையிலும் அவர்களது ஆட்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது அவற்றைத் தவிர்த்து அவர் சிந்தித்துப் பெற்ற முடிவுகளின் அடிப்படையில் அப்போதைய நிலைமைக்குப் பொருத்தமான கல்வி முறை ஒன்றை உருவாக்க விரும்பினார். காந்தியடிகளின் இக்கல்விக் கருத்துக்களை உருவாக்கியதில் ரஸ்கின், டால்ஸ்டாய் போன்றோரது நூல்களும் வாழ்க்கையும் பெருமளவு உதவின.5

காந்தி அவர்களுடைய கல்விச் சிந்தனைகளும் உடல், உள்ளம் ஆன்மா ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தன. கல்வி என்பது ஆன்மப் பயிற்சி பெறல் என்று காந்தியடிகள் கருதினார். காந்தியடிகளின் சர்வோதயக் கல்வித்திட்டம் ஆன்மீகத்திற்கு மட்டுமல்லாமல் பொருளாதார அரசியல் விடுதலைக்கும் வித்திட்டது. கல்வியானது எவ்வகையில் செயற்பட்டாலும் கல்வியின் இறுதி நோக்கம் ஆன்மீக விடுதலை என்பதில் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றின் உலக வரலாற்றில் மதிக்கத்தக்கவர்களாக விளங்கிய ஞானிகளின் வரிசையில் ஆன்மீகம் பற்றிய கருத்துக்களை அள்ளிச் சொரிந்து ஆன்மீகவாதிகளாக விளங்கிய மகான் ஸ்ரீ அரவிந்தர் (1872) அரசியல் உணர்வும், சமுதாய உணர்வும் கொண்ட தத்துவஞானியாவர். அரசியல் வேதாந்தத்தில் மூழ்கி, ஆன்மீக வேதாந்தத்தை வாழ்வின் இலட்சியமாகக் கருதியவராவர். தனது ஆன்மீக உணர்வினால் ஓர் உலகத்தத்துவத்தை மனித குலத்தின் முன் வைத்தார். தேசியத்தை மதிக்கும் அரவிந்தர் அவர்கள் அகில உலக உணர்வை நேசித்தவர். மேனாட்டு பௌதிக பரிணாமவாதத்தின் சாரத்தைப் பாரத நாட்டின் ஆன்மீகக் கொள்கையுடன் இணைத்து தனது தத்துவத்தை உலகிற்கு அளித்துள்ளார். இத்தகைய தத்துவக் கருத்துக்கள் அவர் வாழ்க்கையின் அடி நாளிலிருந்து உருவாகின்றன. 6

ஸ்ரீ அரவிந்தர் கண்ட சமூகக் கருத்துக்களும் ஆன்மீக அடிப்படையானவை. சமுதாயம் என்னும் கட்டுக் கோப்பு மனிதன் தன்னையும் இறைவனையும் புரிந்து கொண்டு வாழ்வதற்குப் பயிற்சி தருகின்றது. தனிப்பட்டவர்கள் தனிவழியிற் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் முன்னேறுவதற்கு வழிகள் செய்து தரப்பட வேண்டும். பின்பு கூட்டுப் பொறுப்பு ஏற்பட வேண்டும் இதன் தேவை கருதி அவர் அனைத்துலகக் கல்வி நிலையத்தைத் தனது கொள்ளையாகக் கொண்டிருந்தார். அனைத்துலகக் கல்லூரியின் இலக்கு எல்லாத் தேசிய இனங்களின் வாழ்வு முறை கலாச்சாரம் போன்றவைகளை அறிந்து மற்றவர்களோடு தொடர்பு வைக்க உதவுவதாகும். உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மகனும் இன, சமய , வர்க்க நாட்டு பிரதேச வேறுபாடின்றி ஏழ்மை, தாழ்மை என்றின்றி எவ்வகைக் கல்வியையும் எந்நிலையிலும் பெற வேண்டும். கல்வியின் மூலம் உலக நெறி வளர வேண்டும். அறிவு, தெளிவு ஒளி என்ற படிமுறையே கல்வியாகும்.7 ஆன்மீக அடிப்படையில் மனித குலத்தை கல்வியின் மூலம் இணைக்க வேண்டும் என்று தன் கல்விச் சிந்தனைகளை வகுத்துள்ளதன் மூலம் இந்துக் கல்வியிலே ஆன்மீக சிந்தனைகளின் அழுத்தத்தைப் புரிய வைத்தார்.

கல்வியானது புறத்தோற்ற ஒருமைப்பாடல்ல. அகத்தோற்ற ஒருமைப்பாடாகும். ஆசிரியராக பேராசிரியராக அவர் வகித்த பதவிகள் கல்வியியல் சிந்தனைகளை வகுத்துக் கொள்ளப் பெரிதும் உதவியது.8 சமூக விடுதலையும் ஆன்மீக ஈடேற்றமும் காணத் துடிக்கும் ஒரு சமுதாயத்திறகு அவரின் கல்வியியற் சிந்தனைகள் வழிகாட்டியாக அமைகின்றன. பாரதம் ஆன்மீக உணர்வுடன், தியாக உணர்வும், அறிவும், நல்ல உளமாட்சியும் உடையதாக அமைதல் வேண்டும்.9 என்பது மகான் அவர்களின் பெரு விருப்பாகும்.

மகானின் இத்தகைய ஆன்மீகம் சார்ந்த இந்துக் கல்விச் சிந்தனைகள் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களின் சிந்தனைகளோடு தொடர்பு கொள்கின்றன. சமூகத்தின் அன்பின் முக்கியத்துவத்தை நல்லொழுக்கத்தை தற்கட்டுப்பாட்டை வெளிப்படுத்தும் சாயியின் கல்விச் சிந்தனைகள் ஆன்மீகத்தை விட்டு வெகு தூரம்செல்லவில்லை. தர்மம், சத்தியம் பிரேமை போன்ற விழுமியங்களை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்பது பகவானின் பெருவிருப்பமாகும்.

இருதயம் என்பது மிகப் பரந்த புலம் எனக் கருத வேண்டும். அந்தப் புலத்தை உழும் கலப்பையாக மனதைப் பயன்படுத்த வேண்டும். குணங்களை எருதுகளாகக் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் பயன்படுத்துவதன் மூலமே இருதயத்தைப் பண்படுத்தலாம். இவ்வகையில் பண்படுத்தப்பட்ட இருதயத்திலே சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை போன்ற பயிர்களை வளர்க்க வேண்டும்.[10] இக்கருத்துகளை பகவானின் சிந்தனைகளிலும் காண முடிகின்றது. நாட்டிலே உண்மையான சிறப்புமிக்க இலட்சியப் பாங்கான குடிமக்களை உருவாக்குவதற்குமே முக்கியமாக சாயி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. மனிதர்கள் மனித மேம்பாட்டுக்கான பாதையிலும், இலட்சிய வழியிலும் செல்லல் சிறந்ததாகும்.

மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கணத்தையும் வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்துவதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. இதற்காகவே அவர்களுக்கு உடல் தரப்பட்டுள்ளது. இத்தகைய மனிதன் மகிழ்ச்சியுடனும் சுதந்திரத்துடனும் இருக்க வேண்டுமானால் தங்களிடையே குடிகொண்டுள்ள கெட்ட எண்ணங்களையும், பழக்கவழக்கங்களையும் அகற்றிவிட வேண்டும். கல்வியானது அறம், ஒழுக்கம், தெய்வீகம் சார்ந்த பாதைகளிற்கு எல்லோரையும் அழைத்துச் செல்கிறது.[11] ஆன்மீ உணர்வைத் தவிர்த்துப் பொருளாதார சுகபோகங்களை தேடி மனிதர்கள் தத்தமது வாழ்க்கையை வீணாக்கக் கூடாது என்பது பகவான் கருத்தாகும்.

மனித இனமானது சுயநலம், பொறாமை சுகம் தேடிஅலைதல் போன்ற சக்திகளில் சிக்குண்டுள்ளது. கல்வியின் மூலம் இவற்றை அகற்றி மனிதர்கள் ஆன்மீக இன்பம் பெறலாம். புத்தகங்களில் இருந்து பெற்ற அறிவை அனுபவங்களால் உறுதிப்படுத்திப் பார்ப்பதுடன் இந்தச் செயல் முறையின் வழியாக மேலும் மானுடப்பண்பை வளர்த்து இறைபருள் பாலிக்கும் நிலையை எய்தலாம். இவ்வாறு தெய்வ சக்தியை நம்பவைத்து அதிலிருந்து படிப்படியாக ஆன்மீகத்தில் உயர்த்துவதே பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களின் அசையாத நம்பிக்கையாக இருந்தது. பாமர மக்களை மட்டுமல்லாமல் மாபெரும் விஞ்ஞானிகளையும் ஆன்மீகத்தின் பக்கம் திருப்பிய பெருமை அவருக்குண்டு. பிழை மலிந்த மானுடரை முதலில் தர்மவழியில் திருப்பி பிழைகள் குறைந்தவர்களாகத் திருத்துவது. பின் அவர்களைப் பக்தர்களாக்கி தெய்வீக அனுபவங்களை வழங்குவது யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களில் உயர்த்துவது. முடிந்த முடிபாக ஆத்மானுபவம் என்ற மோட்சத்தை அருள்வது போன்ற ஆன்மீக விழுமியக் கருத்துக்கள் சத்திய சாயிபாபாவின் கல்விச் சிந்தனைகளாக அமைகின்றன. அமைதியும் மகிழ்ச்சியும் மனிதர்களுக்குள்ளே இருந்த போது அவை மாயையால் மறைக்கப்படும் நிலையில் மனிதன் அவற்றை உணர முடியாமல் தடுமாறுகின்றான். அவன் இவற்றை உணர வேண்டுமானால் தனது உண்மையான தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.[12] ஆன்மீகம் அறிவினால் உணரப்பட வேண்டுமானால் மனிதன் தொடர்ந்து கற்க வேண்டும். தொடர்ந்து கற்கும் போது மனிதனின் மனம் தூய்மையடைகின்றது. மனிதனுள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிக் கொணர்தல் கல்வி என்று கூறப்படுகினறது.

இத்தகைய சிந்தனையாளர்களைப் போன்று இலங்கையிலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 – 1879) அவர்களின் சிந்தனையிலும் ஆன்மீகக் கல்வி பற்றிய பல கருத்துக்களை அவதானிக்க முடிகின்றது. நல்லொழுக்கத்திற்கும் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என விரும்பினார். சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெறுவதன் மூலம் வேத நெறிப்பட்ட வாழ்வின் விழுமியங்களை மக்கள் பெறக் கல்வியினைக் கருவியாகக் கருதித் தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சிக்குக் கல்விப் பணியிலே முழு மூச்சாக ஈடுபட்டார். கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்கு பயன் ஒழுக்கம்; கல்வியென்பது அறமும் முத்தியுமாகும்; கல்வி என்றென்றும் இளமை பொருந்தியது; உண்மைதான் கல்வியின் அணிகலன் என்று எண்ணிச் செயற்பட்டார். எந்த நாட்டையும் எந்த ஊரையும் தன் நாடும் தன் ஊரும் ஆக்குவது கல்வி என்றார்.

சுவாமி விபுலானந்தர் (1832- 1925) அவர்களும் ஆன்மீக தத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். கல்வியின் மூலம் ஆன்மீகப்பயன் பண்பாட்டு பயன் உண்மை, அழகு, நன்மை என்ற மூன்றும் கல்வியின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று சுவாமி அவர்கள் கருதினார்கள்.14

இதே போன்று சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையிலும் ஆன்மீக அழுத்தம் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழகச் சிந்தனையில் பாரத நாட்டுச் சிந்தனையாளர்கள் ஆன்மீகத்திற்குத் தந்த முக்கியத்துவத்தை சேர் பொன் இராமநாதனும் தனது பல்கலைக்கழகச் சிந்தனையில் காண்கிறார். ஆன்மீக நெறியை வலியுறுத்தும் இந்து தர்மம் வாழ்க்கை நெறியையும் வலியுறுத்தும் எனக் கொண்டு வாழ்வை வளம்படுத்தி அதன் விழுப்பயனாய் வீடுபேற்றினைத் தரும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் மெய்யறிவாக வேண்டும் என்பதே அவரது கல்வி இலக்காகக் கொள்ளலாம். ஆன்மீக விருத்திக்குச் சிறந்த சூழலாகிய கல்வி தேசிய சமய ஒழுக்க அடிப்படையில் அமைவதன் மூலமே சாதியமாகும் என்பது அவரது சிந்தனையாகும். ஒருவனது இயல்பான பண்பாட்டுச் சூழலிலேயே ஆன்மீக விருத்தி சீராக அமையும் எனக் கருதிப் பண்பாட்டுக் கருவூலமாய் அமையத்தக்க சமயநெறிப்பட்ட கல்வியே வழங்கப்பட வேண்டும் என்பது சேர். பொன் இராமநாதன் அவர்களது விருப்பாய் இருந்தது. சமய அடிப்படையிலான ஒழுக்க வாழ்விற்கு கல்வி உதவ வேண்டும் என்று கருதினார். ஒழுக்கமே மனித வாழ்வை மாண்புறுத்தும் மருந்து என்ற அவருடைய சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாயுள்ளது.

ஆகவே தொகுத்து நோக்கும் போது இக் கல்விச் சிந்தனையாளர்கள் யாவரும் தேசிய பண்பாட்டு அடிப்படையிலான ஆன்மீக இலக்குள்ள கல்வியினையே வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மனிதன் தன்னுள் உள்ள ஆன்மாவை அறியவும், உணரவும் துணை செய்வதை இந்து மரபுக் கல்வி இந்து மரபின் பரம்பரைச் சொத்து எனலாம். இந்தியக் கல்வி மரபில் ஆன்மீகம் இழையோடாத இடமில்லை எனக் கூறுமளவிற்கு ஆன்மீகம் இந்து மரபின் உயிர்நாடியாக உள்ளது. இந்த ஆன்மீகம் என்பது தனித்துறையாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்


1. லொறென் பறோஸ், மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி, பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் 1992 பக்கம் 7
2. தர்மலிங்கம் கே. கீழைத்தேயக் கல்வியியற் சிந்தனைகள், திருமதி சுபலட்சுமி தர்மலிங்கம் யாழ்ப்பாணம் 1987 பக்கம் 5
3. சந்தானம் எஸ் இந்தியக்கல்வி வரலாறு, முதல் பகுதி, தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் 1966, பக்கம் 103
4. சந்திரசேகரம் ப கல்வித்தத்துவம் யாழ்ப்பாண கூட்டுறவு தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகம் 1975 பக்கம் 104
5. சந்தானம் எஸ் இந்திய கல்வி வரலாறு, மு.சு.நூல, பக்கம் 112
6. கோதண்டராமன் பி. அரவிந்தர் வாழ்க்கை வரலாறு பாகம் 1, பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 1964 பக்கம் 7
7. சந்திரசேகரம். ப கல்வியிற் சிந்தனைகள் சிவஜ்தானம, இணுவில், பக்கம் 33 – 34
8. மிராசங்கரநாராயணன் அரவிந்தர் நசனல் புக் கிரஸ்ட், இந்தியா, சென்னை, பக்கம் 153.
9. Sri Aurabindo ashram, Sri aurobindoand the mother on education Sri aurobindo ashramtrust pandichery 1978 p.p 5-6
10. Saini S.K. Developemnt of Education in India, Rani kapoor, Cosma publicaton new Delhi 1980.
11. லொறோன் பறோஸ் மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி, மு.சு.நூல் பக்கம் 22ல்.
12. கணபதி ரா. ஸ்வாமி பூம்புகார் பிரசுரம் 1977 பக்கம் 134
13. லாறோன் பறோஸ், மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி மு.சு.நூல் பக்கம் 88
14. சந்திரசேகரம் ப. கல்வித் தத்துவம், மு.சு.நூல் பக்கம் 82

# CINTANI

Voll XII 2000 I

1. Sri Lanka and the Urn burial of the Sangam Period : An analysis 01
Prof. S.K.Sitrampalam.

2. The Source of Maxist Philosophy and the Thesis on Feurbach 14
Prof. S. Krishnaraja

3. Critical Works on Elam Fiction 24
Dr. M. Ragunathan

4. The Origin of Tamil- Sinhala Novels in Sri Lanka. 35
Saminathan- Wimal

5. The Problem of Alienation : A review 42
K.Sivananthamoorthy

6. Women Education in Developing Countries: Rethinking for Development. 52
M.Sinnathamby

7. The Political implication of Land Settlement in Tamil Areas 60
S. Sahayaseelan

8. The Ban of Fishing in Jaffna Peninsula and
the Problem faced by fishermen 69
Dr. A. Soosai

9. Mapping of Surface water Bodies through Remote Sensing Technology. 78
Karunagaran- Suthakar

10. Tamil Translation and Coining of Technical Terms in Ealam. 87
Selvaranjitham- Sivasupramaniam

11. Spiritual Thoughts in Traditional Hindu Education 97
J. Rasanajakam